*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN: 2456-5148 (Online)**
*An international, peer-reviewed quarterly academic research journal* **www.ngmtamil.in**

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p90-98** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# எட்டுத்தொகை உணர்த்தும் திருக்குறள் வாழ்வியல் கூறுகள்

Aspects of Life in Thirukkural as Reflected in Ettuthogai

**திருமதி. முனைவர். ஜெ.ஜெயபிரியா**
*உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு),*
*சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி – 620002.*
**drpriyaram22@gmail.com**, **https://orcid.org/0000-0002-7728-8538**
***Mrs. Dr. J.Jayapriya***
*Assistant Professor and Head, Department of Tamil (Sf)*
*Seethalakshmi Ramaswami College Trichy – 620002.*
**drpriyaram22@gmail.com**, *6380134417.*, https://orcid.org/0000-0002-7728-8538

## Abstract:

Sangam literature embodies the way of life articulated through the Tamil language under the aegis of the Sangam. Categorized into *Akam* (inner life/emotions) and *Puram* (outer life/public affairs), these works—specifically the *Ettuthogai* (The Eight Anthologies)—codify the human way of life, present it in a manner relevant to all eras, and endure by conveying the timelessness of these lived experiences. This article examines insights into life found in the distinguished *Ettuthogai* anthologies and analyzes how these themes are reflected in the *Thirukkural*.

The aim of this article is to examine elements of ancient life—specifically hospitality and generosity within domestic life, as well as politics and ethical principles suited to public life. When observing how the *Thirukkural* distills and refines the lifestyles depicted in the *Ettuthogai* anthology into concise couplets, one is prompted to investigate whether Valluvar was a poet of the Sangam era or the post-Sangam era.

Through this article, we can explore the linguistic artistry with which the poets of the Sangam era and Valluvar encapsulated—in simple couplets—the foundational elements of a virtuous life. Drawing upon the *Ettuthogai* (the Eight Anthologies), these verses illustrate key aspects of living

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

such as noble birth, virtuous conduct, education, hospitality, valor, the nature of domestic and ascetic life, generosity, and friendship.

**Keywords:** Ethical living, hospitality, generosity, politics, valor, gratitude

**ஆய்வுச் சுருக்கம்:**

சங்கம் வைத்து தமிழோடு வாழ்வியல் முறைகளை எடுத்துரைத்தவை சங்க இலக்கியங்கள் ஆகும். அவை அகம் என்றும் புறம் என்றும் பாகுப்படுத்தி, மக்கள் வாழும் வாழ்க்கை முறையினை நெறிப்படுத்தி, எக்காலத்திற்கும் ஏற்ற வகையில் காட்சிப்படுத்தி, இன்றும் இந்நிலை தான் என உணர்வுபடுத்தி நிலைத்து நிற்கிறது எட்டுத்தொகை நூல்கள். அத்தகைய சிறப்பு பெற்ற எட்டுத்தொகை நூல்களிலிருந்து வாழ்வியல் செய்திகளை கண்டாய்ந்து திருக்குறளில் அவ் வாழ்வியல் செய்திகள் எவ்விதம் அமைந்துள்ளன என ஆய்கின்றது இக்கட்டுரை.

பண்டை வாழ்வியல் கூறுகளாக அறியப்படுபவன இல்லற வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் விருந்தோம்பல், ஈகை, புற வாழ்வியலுக்கேற்ற அரசியல், வாழ்க்கை நீதி ஆகியவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. எட்டுத்தொகை நூலில் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையினைச் செம்மைப்படுத்தி இரு வரிகளில் திருக்குறள் எடுத்தியம்பியுள்ளதைக் காணும் போது வள்ளுவர் சங்க காலத்து புலவர்தான்? இல்லை சங்கம் மறுவிய காலப் புலவரா? என ஆராயத் தோன்றுகின்றது.

ஆக சங்ககால புலவர்கள் கூறியதும் வள்ளுவர் மொழிந்ததும் மக்கள் நன்னெறியில் வாழ்வதற்குரிய வாழ்வியல் கருத்துகள் நிறைந்த நற்குடிப்பிறப்பு, பண்பொழுக்கம், கல்வி, விருந்தோம்பல், வீரம், இல்லறத் துறவற இயல்புகள், ஈகை, நட்பு என வாழ்வியலின் அங்கங்களாக விளங்குபவற்றின் சான்றாதாரங்களை எட்டுத்தொகையில் அமைந்தவற்றை எளிய இரு வரிகளில் விளக்கிய சொற்சிறப்பத்தை இக்கட்டுரை வழி காணலாம்.

**தரவுச் சொற்கள்:**

வாழ்வியல் நீதி, விருந்தோம்பல், ஈகை, அரசியல், வீரம், நன்றியுணர்வு

**முன்னுரை:**

சங்க இலக்கியம் என்னும் ஆணிவேரினால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழர்களின் வாழ்வாதாரங்களை உயிரோட்டமாக வெளிப்படுத்தியதின் பயனாக இன்று அரும்பாக தளிராக காயாக கனியாக தழைத்தேங்கி நிற்கும் இளமைமாறாமல் கற்பகவிருட்சமாக விளங்குவது தமிழ் இலக்கியம்.

அவ் இன்பத் தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகைப் பாடல்களில் அகத்தையும் புறத்தையும் உணர்த்தி அறநூலாக விளங்கும் திருக்குறளின் ஆன்றமைந்த வாழ்வியல் சார்ந்த செய்திகளை இக்கட்டுரை ஆய்கின்றது.

**சங்க இலக்கியம்:**

KALANJIYAM

சங்க இலக்கியம் பதினெண் மேற்கணக்கு மற்றும் பதினெண்கீழ்க்கணக்கு என இரு நிலைகளில் நூல்கள் வரிசைப்படுத்தப்படடுள்ளது. அவற்றில் காதலும் வீரமும் இருக்கண்களாகக் கொண்டு மக்களிடத்து பண்பையும் பயனையும் வளர்த்தவை எட்டுத்தொகை நூல்கள். எட்டுத்தொகை நூல் பற்றி,

***“நற்றிணை நல்லகுறுந்தொகை ஐங்குறுநூறு***
***ஒத்த பதிற்றுப் பத்தோங்கு - பரிபாடல்***
***கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புற மென்***
***றித்திறத்த எட்டுத்தொகை”[1]***

என்னும் பழம்பாடல் குறிப்பிடுகின்றது. அகமானாலும் புறமானாலும் வாழ்வியலுக்கு அடிப்படைத் தேவை அறம் என்பதை உணர்த்தி நின்று வாழ்வியலைப் பற்றி சங்கப்பாடலுக்குப் பின் வந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான உலகப் பொதமறை என கூறப்படும் திருக்குறளில் ஒன்றமைந்த வாழ்வியல் சார்ந்த செய்திகளை அறியலாம்.

## இல்லற வாழ்க்கை:

தலைவியானவள் இப்பிறப்பில் தான் விரும்பி திருமணம் செய்து கொண்டவனை மறுமைக்கும் கணவனாக வரவேண்டும் என்று நினைக்கிறாள்.

***“இம்மை மாறி மறுமை யாயினும்***
***நீயா கியரென் கணவனை***
யானா கியர் நின் நெஞ்சுநேர் பவளே”[2] – (குறுந். - 49)

என்ற இப்பாடலின் வழி தலைவியின் உண்மையான மனத்தையும் சிறந்த நடத்தையையும் காண முடிகின்றது. தலைவனே தனக்கு எல்லாம் என்னும் அன்புடை நெஞ்சத்தினை,

***இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்***
கண்ணிறை நீர்கொண் டனள்”[3] – குறள் - 1315: அதி – 132

என்ற குறளின் வழியிலும் காணமுடிகின்றது.

அன்பு என்பது இல்வாழ்க்கையில் அடிப்படைப் பண்பைக் குறிப்பது நெஞ்சம் நெகிழ்ந்து இயைந்து வாழ்வதற்கு அன்பு துணையாக அமையும் என்பதைக் குறுந்தொகைப் பாடலானது

***“யாயும் ஞாயும் யாரா கியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?***
செம்புலப் பெயல்நீர் போல”[4] (குறுந் - 40)

சிவந்த நிலத்தில் பெய்த மழைநீர் ஒன்றெனக்கலந்து, அன்புடையாரின் நிலைமையை எடுத்துணர்த்தியமை போல இருவரிகளில்

***“அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்***
என்பும் உரியர் பிறர்க்கு”[5] (குறள் - 72)

அருமையான உயிர் இவ்வுடம்போடு பொருந்தி இயங்குவதற்குக் காரணம் அனைத்து இடத்திலும் அன்பு செய்து வாழ்வதாலேயே என்பதை நிறுவுகின்றது.

**விருந்தோம்பல்:**

ஒரு மனிதனிடம் மனதில் ஈரம் உள்ளது என்ற பண்பு உண்டென்பதை வெளிப்படுத்துவது பசியென வந்தவற்;கு உணவளித்தலாகும். "உண்டிக்கொடுத்தோர் உயிர்க்கொடுத்தோரே (புறம்-18) என பசிக்கு உணவுத் தருதலே சிறந்த விருந்தாகும். "விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"[6] என்ற தொல்காப்பிய நூற்பாவில் 'விருந்து' என்பதற்கு 'புதுமை' என்று பொருள் கூறப்படுகிறது. அதன்பயன் புதிதாக வருபவரை வரவேற்று விருந்தயர்வதில் எந்தவொரு துன்பமும் இல்லை என்பதை,

***"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை***
பருவந்து பாழ்படுதல் இன்று."[7] (குறள் - 83)

தன்பால் வந்த விருந்தினரை போற்றியதை இக்குறள் வழியறியலாம்.

புறநானூற்றுத் தலைவி, தன் இல்லத்திற்கு வந்த விருந்தினரை போற்றி பணியாற்றியதின் காரணமாக தமக்கு ஓய்வு என்பது இல்லை என்பதையும் அதனால் வருத்தம் இல்லை என்பதையும் தெரிவிக்கின்றாள். மற்றொரு முல்லை நிலத்தலைவி, தன்னை நாடி வந்த பாணர் கூத்தர் என அனைவருக்கும்

***"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து***
நோக்கக் குழையும் விருந்து."[8] (குறள் - 90)

என்ற குறளுக்கு ஏற்ப விருந்து படைத்து வருகையில் வரகும் தினையும் தீரவே வந்த விருந்தினரை பேணுவது நம் கடமை என்று உணர்ந்த புறநானுற்றுத் தலைவி,

***"வரகும் திணையும் உள்ளவை எல்லாம்***
***இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென***
***குறித்து மாறு எதிர்ப்பை பெறா அமையின்***
***குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து***
சிறிது புறப்பட்டன்றோ இளளே"[9] புறம் - 333 : 9-13

தன் இல்லத்தில் விதைக்காக வைத்திருந்த தினையினை உரலிலிட்டு உணவளித்த திறத்தினால் விருந்தோம்பல் பண்பில் உயர்ந்து நிற்பதை உணர்த்துகின்றது.

அன்பும், அறனும், பண்பும் உடைய இல்வாழ்க்கை விருந்தோம்பல் நிலையிலும் ஈதல் நிலையிலும் அமைதல் சிறப்பென்று குறுந்தொகை பாடல் வழி,

***"ஈதலும் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்***
சேய்வினை கைம்மிக வெண்ணுமி யவ்வினை"[10]. (குறுந்.63: 1-2)

என ஈதலின் சிறப்பை வள்ளுவரும்,

***"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல தாம்உடைமை***
வைத்துஇழக்கும் வண் கணவர்"[11] (குறள்.228)

என உணர்த்துகிறார்.

பிரிந்து சென்ற காதலன் மீண்டும் வரின் விருந்தயர்தல் மரபாகும். இதனை,

***"மாலை நனி விருந்நதயர் மார்***

தேர்வரு மென்று முறை வாராதே"[12] –(குறுந் 155: 6-7)

என்ற பாடலில் விருந்தயர்தலைக் குறிப்பிடுகின்றது.

**ஈகை:**

பிறருக்கு உதவி செய்து வாழ்தல் மனிதப் பிறவியின் கடமை. ஒருவர் தம் உழைப்பில் ஈட்டிய பொருளின் பயன் மற்றவர்களின் வறுமையைப் போக்கவும், பிறர்க்குப் பயன் தரும் வகையில் உதவுவதே ஆகும். இக்கருத்தினை, ஒரு பொருளுமற்ற வறியவர்க்கு விரும்பி ஒரு பொருளைக் கொடுப்பதே உண்மையான ஈகை என்பதை, "எத்துணையாயினும் ஈதல் நன்று"[13]-(புறம்-143) என கோப்பெரும் பேகனை பரணர், மற்றொரு புலவரை ஆற்றுப்படுத்தும் நிலையில் வரையாது வழங்கும் வல்லாண்மை உடையவன் அவனை நீ காணின் உன் வறுமை போகும் என்று ஆற்றுப்படுத்துகிறார்.

*"வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்*

*வருந்தி வந்தோர் மருங்கி நோக்கி*

அருள வல்லை ஆடுமதி"[14] -(புறம்-27)

என வரும் புறம்பாடலில் வறியவர்களுக்கு வழங்குவதால் வானவூர்தி இல்லாமலேயே வானத்தில் பறக்கும் தன்மையை இறைவன் வழங்குவான்.

*"நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்*

இல்லெனினும் ஈதலே நன்று"[15] -(குறள்-222)

மேலுலகம் இல்லை எனினும் ஈதலே சிறந்தது என்று மொழிவது போல பெருந்தொகைப் பாடல்கள் ஈதலின் மேன்மையை பல இடங்களில் செம்மைப்படுத்துகின்றன. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"[16]-(புறம்-18)

பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு ஈதலால் வரும் பேரின்ப வாழ்வை சுட்டும் போது மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, இதனை வழங்கும் நீ உயிhக்; கொடுத்த இறைவனாகவே கருதப்படுவாய் என்கிறார்.

*"வறியார்க் கொன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்*

குறியெதிர்ப்பை நீரது உடைத்து"[17] -(குறள்-221)

எனவும்,

"சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம்

ஈதல் இயையாக் கடை"[18] -(குறள்-230)

எனவும் சங்கஇலக்கியம் எதிர்பாராமல் உதவுவது தமிழ்ப்பண்பாடு என்பதை உணர்த்துகிறது. சமூகத்தில் சமநிலை கெடின்;;; மற்ற எல்லா இடையூறுகளும் எழும் என்பதை உணர்த்தவே ஈதலை உயரிய வாழ்வியல் கடனாகப் புலவர்கள் உணர்த்தி நிற்பது சிந்தனைக்குரியது.

**வீரப் பண்பாடு:**

காக்கைப்பாடினியார், நச்செள;ளையார், தம் மகனின் வீரச் செயலை மறக்குல மங்கை ஒருத்தி வீர உணர்வினை

*" 'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்*

*முலைஅறுத் திடுவென், யான்' எனச் சினைஇ,*

*கொண்ட வாளொடு படுபிணம் பெயரா,*

*செங்களம் துழவுவோள், சிதைந்து வேறாகிய*

*படுமகன் கிடக்கை காணூஉ,*

ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே!".[19] –(புறம்.278: 4-9)

புறமுதுகில் புண்பட்டு இறந்தானேயானால் அவன் பாலுண்ட முலை அறுத்தெறிவேன் என்றவள் செறுகளத்தில் மார் மீது புண்பட்டு இறந்த மகனைக் கண்டவுடன் ஈன்ற பொழுதை விட பெரிதும் மகிழ்ந்ததனை இரு வரிகளில்,

*"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*

சான்றோன் எனக்கேட்ட தாய்".[20] -(குறள்.69 அதி.7)

என மக்கள் போற்றும் சான்றோனாக இருந்து குடிப்பழிப் போக்கினமையால் பெரிதும் மகிழ்ந்த தாயின் உணர்வினை எடுத்துக்காட்டுகிறது.

மற்றொரு மறக்குல மங்கை அரசனால் மதிக்கப்பட்ட தன் மகன் நன்றிக்கடனாக இன்னும் தன் உயிரைத் தருவதற்குரிய காலம் வரவில்லையே என்று ஏங்குவதாக,

*"பலர் மீது நீட்டிய மண்டை என்சிறுவனைக்*

*கால்கழி கட்டிலில் கிடப்பு,*

தூவெள் அறுவை போர்ப்பித்திலதே"[21] (புறம்.286: 3-5)

என புறநானூற்றுப் பாடல் மறக்குடித் தாயின் ஏக்கத்தைக் குறிப்பிடுகிறது. இது

*"புரந்தார்க்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு*

இரந்துகோள் தக்கது உடைத்து".[22] –(குறள்.780: அதி.78)

என வேந்தன் பொருட்டு சாவை ஏற்றுக்கொள்வது சிறப்புக்குரியது என்பதை விளக்குகிறது.

**அரசியல்:**

பகை மேற்கொள்ளவிருக்கும் தலைவனை இளையன் என்று கருதி போர் மேல் சென்றால் மானம் இழப்பர். எனவே, இகழ்வதை விட்டு பாதுகாப்பாக வாழ்க என்று ஔவையார் அதியனின் வீரத்தினை,

*"தாள் படு சில் நீர்க் களிறு அட்டு வீழ்க்கும்*

*ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை*

*நுண்பல் கரும நினையாது*

இளையன் என்று இகழின் பெறலரிது ஆடே".[23] –(புறம்.104: 3-6)

என அதியனை இளையவன் என்று இகழ்ந்து அவனிடத்தே போரிட வந்த தோல்வியுற்ற பகைவரிடத்து இடத்தாலும், மெய் வலியாலும் இயல்பாகவே பெருங்களிற்றினை கவர்ந்துக் கொள்ளும் முதலை போன்று வலிமையானவன் என்பதை, 'நெடும் புனலுள் வெல்லும் முதலை' (குறள்.495) என்ற குறள் மூலம் உருவத்தைக் கண்டு அளவிடமுடியாது என்ற அரசியல் நெறியை வழங்குகிறது.

வாழ்க்கை நீதி:

முன்னோர்கள் சேர்த்து வைத்த பொருள்களைக் கொண்டு ஒருவன் குடும்பம் நடத்த முற்படுவான் எனில் அவனை மனிதனாகவே மதிக்காத நிலை காட்டப்படுகிறது. தன் முயற்சியால் புதியப் பொருள்களைத் தேடி முன்னோர் ஈட்டியப் பொருள்களைக் காத்த உயரிய செந்நெறி,

***"உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்***

இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவெனச்"[24] -(குறுந்.283)

எனும் வரியில் வாழ்க்கை நீதியைப் புகட்டுகிறது. அறநெறிப் பிறழாமல் நீதி காத்தல் சான்றோர்க்கழகு என்பதை, 'அறிகரி பொய்த்த ஆன்றோர்க்கில்லை'[25] (குறுந்.184) என ஒவ்வொருவரும் சான்றோர்களாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் நீதிகளை வழங்குகிறது.

அனைத்திற்கும் பொருளே அடிப்படை என்று கருதும் சமகால சமூகம் பொருளுக்காக எதையும் செய்துவிட துணிகிறது.

***"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்;***
***செல்வம் அன்று: தன்செய்வினைப் பயனே:***
***சான்றோர் செல்மென்பது சேர்ந்தோர்***
***புன்கண் அஞ்சும் பண்பின்***

மென்கண் செல்வம் செல்மென் பதுவே"[26] (நற்றி – 210)

என்ற நற்றிணைப் பாடல் தன்னைச் சார்ந்து வாழ்வோரின் துன்பத்தினைக் கண்டு இரக்கம் கொண்டு அன்பு செலுத்தி அவர்தம் துன்பத்தை தமது துன்பமாக கருதும் பண்பையே சிறந்த செல்வமாக கருதியதை

***"அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்***

பூரியார் கண்ணும் உள"[27] – (குறள் -241 அதி 25)

என்பதிலும்

***"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லாrக்***

கிவ்வுலகம் இல்லால் யாங்கு"[28] – (குறள் 247 அதி 25)

என்பதிலும் பொருளை மட்டுமே நிலையான செல்வம் என்று நினைத்து மனித மாண்புகளற்ற செயல்களில் ஈடுபட்டு நுகர்வு கலாச்சாரத்தில் சிக்கி சீரழிவதைத் தடுக்க, கொடுக்க கொடுக்க குறையாத அறச்செல்வமான அருட்செல்வமே நீடித்து நிற்கும் உயர்ந்த செல்வம் என்று நம் தமிழர் கண்ட வாழ்வியலை எடுத்துக்காட்டுகின்றது.

**நன்றியறிதல்:**

ஒருவன் வழியற்று நிற்கும் காலத்தில் அவனுக்கு எவரேனும் சிறு உதவி புரிந்தாலும் கடல் என நினைத்து மறவாது இருக்க வேண்டும். அவ்விதம் செய்நன்றி மறந்தவர் மறுபிறப்பில் நற்கதியை அடைய மாட்டார்கள் என்பதை

***"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்***
***மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்***
***குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்***
***வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென***

***'நிலம் புடைபெயர்வது ஆயினும் ஒருவன்***

செய்தி கொன்றோர்க்கு உய்திஇல்' என"[29] – (புறம் 34 : 1-6)

ஒருவன் செய்த நன்றியை சிதைத்தோர்க்கு நரகம் உண்டு என்பதை ஆலத்தூர்க் கிழார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடத்து செய்நன்றி மறத்தலின் விளைவினை எடுத்துரைக்கின்றார்.

***"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***

செய்நன்றி கொன்ற மகற்கு"[30] – (குறள் 110 அதி 11)

என்று செய்ந்நன்றியின் பெருமையை இருவரிகளிலும் குறள் மொழிகின்றது.

## தொகுப்புரை:

எட்டுத்தொகைப் பாடல்களில் வாழ்க்கை விளக்கச் செய்திகளை இரு வரிகளில் துள்ளிய முறையில் திருக்குறள் எடுத்துரைக்கின்றது. இக்கட்டுரையின் வாயிலாக மக்களின் அரசியல், வீரப்பண்பாடு, விருந்தோம்பல், ஈதல் இன்பம், நன்றியுணர்வு போன்ற வாழ்வுக்குத் தேவையான உன்னத மேன்மையான அறநெறியினை இரு வரிகளில் சொற்சித்திரமாக வடிவமைத்துள்ளதை கண்டு உணர்ந்தோம்.

## அடிக்குறிப்புகள்:

1. சாமி.சிதம்பரனார் - தமிழர் வாழ்வும் பண்பாடும் ப – 4
2. குறுந். – 49
3. குறள் - 1315: அதி – 132
4. குறுந். – 40
5. குறள் - 72: அதி – 8
6. தொல் நூற்பா – 540
7. குறள் - 83
8. குறள் - 90
9. புறம் - 333 : 9-13
10. குறுந்.63: 1-2
11. குறள்.228
12. குறுந் 155: 6-7
13. புறம்-143
14. புறம்-27
15. குறள்-222
16. புறம்-18
17. குறள்-221
18. குறள்-230

KALANJIYAM

19. புறம்.278: 4-9
20. குறள்.69 அதி.7
21. புறம்.286: 3-5
22. குறள்.780: அதி.78
23. புறம்.104: 3-6
24. குறுந்.283
25. குறுந்.184
26. நற்றி – 210
27. குறள் -241 அதி 25
28. குறள் 247 அதி 25
29. புறம் 34 : 1-6
30. குறள் 110 அதி 11)

**துணை நூல் பட்டியல்:**

[1.] சாமி.சிதம்பரனார் - தமிழர் வாழ்வும் பண்பாடும் - சாரதா பதிப்பகம் சென்னை 14. முதற்பதிப்பு – டிசம்பர் 2011.

[2.] முனைவர் வி.நாகராசன் (உ.ஆ). சங்க இலக்கியம் குறுந்தொகை - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை -98. 4 ஆம் பதிப்பு – அக்டோபர் 2011

[3.] பரிமேலழகர் உரை. திருக்குறள் - பழனியப்பா பிரதர்ஸ் சென்னை -14. ஏழாம் பதிப்பு -2007.

[4.] இளம்பூரணனார் உரை. தொல்காப்பியம் பொருளதிகாரம் - சாரதா பதிப்பகம் சென்னை 14. 11 ஆம்; பதிப்பு – ஜீன் 2011.

[5.] முனைவர் வி.நாகராசன் (உ.ஆ). சங்க இலக்கியம் புறநானூறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை -98. 4 ஆம் பதிப்பு – அக்டோபர் 2011

[6.] முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ). சங்க இலக்கியம் நற்றிணை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை -98. 4 ஆம் பதிப்பு – அக்டோபர் 2011